டிலே வாங்கி, வெயிட்டிலே விற்க வேண்டுமென்று சொல்கிறபோது சில குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. மொத்த வியாபாரிகள் இதில் தங்களுக்குள்ள கஷ்டத்தை எடுத்துத் தெரிவித்தார்கள். ஆகையால், அரசாங்கமே கோடவுன்களிலிருந்து அரசாங்கத்தின் லாரிகளிலேயே சில்லரை வியாபாரிகளுக்குக் கொடுத்தார்கள். அப்படிக் கொடுக்கப்படுவதிலும்கூட ஷார்ட்டேஜ் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, இதைப் பரிசீலனை செய்து என்ன என்ன ஏற்பாடுகள் செய்ய முடியுமோ அவற்றைச் செய்வதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

* 381 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) 1965 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் தென்காசித் தொகுதியில் எத்தனை நெல் பதுக்கல் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன ?

(இ) அவைகளுள், எத்தனை பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது ?

(உ) அதன் முடிவு என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) No case of hoarding of paddy was detected in Tenkasi taluk during January and February 1965.

(b) & (c) Do not arise.

திரு. து. ப. அழகமுத்து : நெல் பதுக்கல் சம்பந்தமாக வேறு ஏதேனும் வகையில் வழக்குகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா : வேறு எந்தவிதமான வழக்கு என்பது எனக்கு ஒன்றும் புரியவில்லை.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : அந்தப் பகுதியில் இந்த வழக்கு தொடரப்பட்ட காரணத்திற்காக, அந்த வட்டத்து கோட்டாட்சித் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர் இவர்கள் மாற்றப்பட்டு இருக்கிறார்கள் என்பதாவது சர்க்காருக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் சபாநாயகர் அவர்களே, நான் பதில் சொல்லும்பொழுது 'No case of hoarding of paddy was detected in Tenkasi taluk during January and February, 1965'. என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறேன். அப்படியிருக்கும் பொழுது இந்தக் கேள்வி எப்படி வந்தது என்று தெரியவில்லை.

MR. SPEAKER : The Hon. Minister specified some period and said that during that period there was no such case. The subsequent question does not therefore arise. If the hon. Member want to know further details, he may put a separate question.